www.newwisdomministries.com

கிறிஸ்துவே கடவுளிடமிருந்து நமக்கு வரும் ஞானம்

1கொரிந்தியர் 1:30



# ஞான ஒலி

## இணைய வார இதழ்

ஞானம் 6 – ஒலி 09 | 26-02-2023





# ஏழை மக்கள் தலைவன்

## தலையங்கம்

அருட்பணி. சைமன் பீட்டர்

அன்பிற்கினிய சகோதர, சகோதரிகளே வணக்கம். தவக்காலத்தை ஆடம்பரமாகத் துவக்கியுள்ளோம். அனைவரும் புதுத்திட்டங்களோடு புது ஆன்மீகப் பயணத்தை ஆரம்பித்துள்ளோம். அனைவருக்கும் ஞான ஒலியின் சார்பில் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஊதாரி மைந்தன் தன் தந்தையிடம் திரும்பிச் செல்வதுபோல ஆவலோடு இறைவனைத் தேடி பயணித்தை ஒருசிலர் சிலிர்போடு துவக்கியிருக்கலாம். பலர், இறையனுபவத்தில் புது உச்சங்களைத் தொட இக்காலத்தில் புதுமையான முயற்சிகளைத் துவக்கியிருககலாம்.

நமது பயணம் எப்படிப்பட்டது, எதற்கானது என்பதை நாம் அறிவோம். எது எப்படியிருப்பினும். இத்தவக்காலம் அனைவருக்கும் அற்புதங்களைக் கொட்டித் தருகின்ற காலம். இறைவனை மிக அருகில், இன்னும் சிறப்பாக அவரைத் தெளிவாகப் பார்க்கவும். அனுபவிக்கவும் அருளையும், அனுமதியையும், வாய்ப்பையும் நமக்கு இறைவன் தருகின்ற காலம் இத்தவக்காலம்.

இத்தவக்காலத்தை இந்தாண்டும் நமக்குத் தந்ததற்காக இறைவனுக்கு நாம் நன்றி கூறுவோம்.

நம் வாழ்வில் இறைவனும், சகமனிதரும் நம் வாழ்வில் மிகவும் முக்கியம் என்பதையும், ஒன்றைவிட்டு மற்றொன்றை மட்டும் தக்கவைத்துக் கொள்ள முடியாது என்பதையும் நமக்குக் கற்றுத் தரும் காலம் இத்தவக்காலம். இரண்டும் நீதித்தராசின் இரண்டு தட்டுக்கள். இரண்டும் சரிசமமாக நிற்க வைப்பது, சமநிலை உறவுப் பிணைப்போடு வாழ்வது நமது பொறுப்பும், கடமையுமாகும்.

இந்தத் தலையங்கத்தில் மக்களின் சேவையே மகேசன் சேவை என்பதை வாழ்ந்துகாட்டிய ஒருசிலரைப் பற்றிக் கூற ஆசைப்படுகின்றேன்.

அவர்கள் அனைவருமே, இயேசுவின் வாழ்விலிருந்து பாடம் கற்றுக் கொண்டு, மக்களுக்காகத் தங்களையே அர்ப்பணித்து வாழ்ந்து இன்றுவரை வரலாற்றிலும், மக்கள் மனங்களிலும் நீங்கா இடம்பிடித்திருக்கின்றார்கள் என்று சொன்னால் அதுமிகையாகாது.

இயேசுவை, அவரது வாழ்க்கைப் பாடங்களைப் பின்பற்றுகின்ற அனைவருமே, அத்தகைய மகிமையைப் பெறுவது உறுதி. காரணம், இயேசு வகுத்துக்கொடுத்த பாதை அப்படிப்பட்டது.

ஒருமுறை கர்மவீரர் காமராஜ் அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தபோது அவரை சந்திக்க எம்.ஜி.ஆர் அவர்கள் முதலமைச்சரின் அலுவலகத்திற்கு வந்தார். சந்திப்பு முடிந்தபிறகு மதிய உணவு வேளை...அப்போது காமராஜர் அவர்கள் தன்னோடு மதிய உணவை உண்ண வேண்டும் என்று எம்.ஜி.ஆரை பல முறை வற்புறுத்தி அழைத்தார் ஆனால், அத்தனை முறையும், அவரின் அழைப்பை மறுத்துவிட்டு, தனக்காக உணவு தயாராக இருக்கின்றது, ஆகவே, நான் அங்கு சென்று சப்பிட்டுக் கொள்கின்றேன் என்று சொல்லிவிட்டுச் சென்றுவிட்டார்.

இதனைப்பார்த்த அவரது தனிப்பட்ட உதவியாளர், திரு.காமராஜிடம், நீங்கள் யாரையம் உங்களோடு மதிய உணவு உண்ண அழைக்கமாட்டீர்கள், ஆனால் எம்.ஜி.ஆரை மட்டும் நீங்கள் ஏன் இவ்வளவு வற்புறுத்தி அழைத்தீர்கள்

என்று கேட்டபோது, திரு.காமராஜர் அவர்கள் அதற்கு, இந்த மனுஷன் தினமும் நூற்றுக்கணக்கான மக்களுக்கு இலவசமாக உணவு வழங்கிவருகின்றார். அப்படிப்பட்ட இவருக்கு ஒருமுறையாவது நான் உணவு கொடுத்து புண்ணியம் தேடிக்கொள்ளலாம் என்றுதான் அவரை இப்படி வற்புறுத்தி அழைத்தேன் என்று கூறினார்.

தானங்களிலேயே மிகச் சிறந்த தானம் அண்ணதானம் என்று முன்னோர்கள் சும்மாவாகவா சொன்னார்கள்.

திரு.காமராஜர் அவர்கள் ஆங்கிலம், ஹிந்தி, மலையாளம், தெலுங்கு போன்ற அனைத்து மொழிகளிலும் தன்னைச் சந்திக்க வருபவர்களிடம் சுலபமாகவும், சரளமாகவும் பேசுவார். அவரிடம் நெருங்கிப் பழகுபவர்களுக்கு மட்டுமே இது தெரியும்.அவர் இறந்த பிறகு அவரின் இல்லத்திற்கு முதலில் சென்றவர் அன்றைய சபாநாயகராக இருந்தவர் க.ராஜாராம் அவர்கள். அங்கு காமராஜரின் உதவியாளர் மட்டும் அழுதுகொண்டிருந்தார். அப்போது அவர் வாழ்ந்த இல்லத்திற்குள் வலம் வந்தார். மேலும் மேல்மாடிக்குச் சென்று பார்த்தபோது, அங்கு ஆயிரக்கணக்கான ஆங்கிலப்புத்தகங்கள் இருந்தன. அந்த புத்தகங்களை யார் படிப்பார்கள் என்று க.ராஜாராம் அவர்கள் கேட்டபோது, ஐயா மட்டும்தான் இந்த அறைக்கு வருவார். அவர்தான் இந்தப் புத்தகங்கள் எல்லாவற்றையும் பாடித்தார் என்று அவரின் உவியாளர் வைரவன் அப்போது சொன்னார். க.ராஜாராம் அவர்கள் அந்த புத்தகங்களைப் புரட்டிப்பார்த்தபோது அத்தனை புத்தகங்களையும் படித்து அவற்றில் குறிப்புகளையும் அவர் எழுதி வைத்திருந்தார் என்பதைப் பார்த்தபோது அனைவருக்கும் மிகுந்த ஆச்சரியத்தைத் தந்தது.

திருச்சி.வேலுச்சாமி அவர்கள், திரு.காமராஜ் அவர்கள் உயிரோடு இருந்தபோது, அவரின் ஆங்கிலப்புலமைப் பற்றி பேசும்போது, ஐயா, நீங்கள் ஒரு வெளிநாட்டவரைப் போல ஆங்கிலம் பேசத் தெரிந்திருந்தும், ஒருமுறைகூட பொதுவெளியில் நீங்கள் ஆங்கிலத்தில் பேசியதில்லையே ஏன்? என்று கேட்டார். அதற்கு திரு.காமராஜர் அவர்கள், நான் சாமானிய மக்களின் தலைவன். நான் அவர்கள் மொழியில்தான் பேசவேண்டும். தப்பித்தவறி, நான் ஆங்கிலத்தில் பேசிவிட்டால், அவர்கள் என்னிடமிருந்து அந்நியப்பட்டுவிடுவார்கள். அதன்பிறகு நான் அவர்களுக்கான தலைவன் இல்லை என்று நினைத்திவிடுவார்கள் என்று சொன்னாராம்.

தனது தாய்க்கு அவர் இருந்த பாஞ்சாயத்து, அவர் முதலமைச்சர் காமராஜரின் தாய் என்பதற்காக அவரின் வீட்டிற்கு ஒரு தண்ணீர் குழாயை அமைத்துக் கொடுத்தார்கள். திரு.காமராஜர் அவர்கள் தன் தாய் வீட்டுக்கு வந்து புதிதாகப் போடப்பட்டுள்ள தண்ணீர் குழாயைப் பார்த்து தன் தாயிடம், அதான் நம்ம வீட்டுக்குப் பக்கத்தில் தெருக்குழாய் இருக்குதே, அங்கே போய் தண்ணி எடுத்துக்கொள், அப்புறம் எதுக்கு உனக்கு ஏன் இந்தக் குழாய் என்று அதை அப்புறப்படுத்த உத்தரவிட்டாராம். அவர்தான் தன்னலமற்ற ஒப்பற்ற மக்கள் தலைவன்.

மக்களுக்காகவே சிந்தித்தவர், செயல்பட்டவர் அவர். ஆகவேதான் அவரை பெருந்தலைவர் காமராஜர் என்று அழைக்கப்படுகின்றார். அவர் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தபோது மக்களுக்காக அவர் செய்துமுடித்த திட்டங்கள் வரலாற்றுச் சாதனைகள் என்பதை நாம் மறக்கக் கூடாது.

அவர் 30,000 பள்ளிகளைத் திறந்து, தமிழர்களின் கல்விக் கனவை நிறைவேற்றினார். இலவச மதிய உணவு. இலவச பள்ளிச் சீருடைகள், இலவச பள்ளிப் பாடப்புத்தகங்களை வழங்கினார். திருச்சி பெல் நிறுவனம், நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம், பெரம்பூர் ரயில் பெட்டிச் தொழிற்சாலை, ஹிந்துஸ்தான் போட்டோ கம்பெனி, மற்றும் மருத்துவ உபகரணங்கள் தயாரிக்கும் நிறுவனம் போன்றவற்றை உருவாகக் காரணமானவர்.பவானிசாகர் அணை, மணிமுத்தாறு அணை, ஆரணி அணை, வைகை அணை, அமராவதி அணை, சாத்தனூர் அணை போன்றவை அவரால் உருவானவை. காடாம்பாறை டேம் அவற்றில் மிகவும் சிறப்பானது.

வால்பாறைக்குச் செல்லும் வழியில் அமைந்துள்ளது இந்த காடாம்பாறை மின்உற்பத்தி நிலையம். ஆசியாவிலேயே மிகவும் சிறப்பான மின்உற்பத்தி நிலையம் அது. அங்கு மலையிலிருந்து வரும் சிறுசிறு நீர் வீழ்ச்சியிலிருந்து வரும் தண்ணீரைக் கொண்டு மின் உற்பத்தி செய்ய முடியுமா? என்று அரசுப் பொரியாளர்களிடமும், வல்லுநர்களிடமும் ஆய்வு செய்யச் சொன்னார். பல மாத ஆய்வுகளுக்குப் பிறகு அவர்கள் முதலமைச்சர் காமராஜரிடம் அந்தத் திட்டமம் சாத்தியமே இல்லை என்று சொன்னார்கள். அதற்கு, திரு.காமராஜர் அவர்கள், இதைச் சொல்வதற்காகவா அரசு உங்களை நிணுமித்து மாதாமாதம் சம்பளம் கொடுத்து வருகிறது. அங்கு இருக்கும் தண்ணீரைக் கொண்டு மின்சாரம் தயாரிக்க ஏற்பாடு செய்யுங்கள் என்று சொன்னார். அதற்கு எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை என்று கட்டளை பிறப்பித்தார்.

இன்று அங்கு ஆசியாவிலேயே இதுதான் மிகச்சிறப்பான மின் உற்பத்தி நிலையமாக செயல்பட்டுக் கொண்டுவருகிறது. அங்கு கீழிருக்கும் தண்ணீரை, குழாய்கள் மூலமாக மலையின் மேலே கொண்டுசென்று அங்கிருந்து அந்தத் தண்ணீரை வேகமாக கீழே செலுத்தி, மலையடிவாரத்திலிருக்கும் இயந்திரங்களை இயக்கி மின்சாரம் தயாரிக்கப்படுகின்றது.

மக்களுக்காகவே சிந்தித்து, அவர்களுக்கான திட்டங்களைச் செயல்படுத்திய அவரைப்போன்ற தலைவர்கள் மிக அறிதாகவே அவதரிப்பார்கள். அப்படிப்பட்ட அனைவரும், இயேசுவைப் போன்று மக்களுக்காக வாழ்ந்ததால்தான் அவர்கள் இன்றும் மக்கள் மனதில் நிலைத்து நிற்கின்றார்கள். அதுதான் பிறரன்பு தருகின்ற நிலைவாழ்வு.

அத்தகைய பண்பை நாமும் வளர்த்துக் கொள்ள இத்தவக்காலம் நமக்கு உதவுவதாக.

# விவிலியம்
## அறிவோம்-79





அருட்பணி. ஆ. அலெக்ஸ் CMF

### லேவியர் குருத்துவத் தொடக்கம்

திருஉறைவிடம் நிறுவப்பட்டுவிட்டது. திருஉறைவிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படவேண்டிய பலிகள் மற்றும் காணிக்கைகள் பற்றியும் ஆண்டவர் மோசேயுடன் பேசிவிட்டார். இந்தப் பலிகளையும் காணிக்கைகளையும் ஒப்புக்கொடுப்பது யார்? என்ற கேள்வி எழுகிறது. ஆரோனும் அவரது வழிமரபினரும் ஆண்டவரால் இந்தப் பணிக்காகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இனி அவர்கள் திருநிலைப்படுத்தப்படவேண்டும். கடவுளின் திருமுன்னிலையில் நின்று பலிகளையும் காணிக்கைகளையும் செலுத்துவதற்குத் தகுதியுள்ளவர்கள் ஆக்கப்படவேண்டும். இந்தத் திருநிலைப்படுத்துதல் நிகழ்வில் மோசே பெரிய குருவாகச் செயல்படுகிறார். கடவுளுக்கும் ஆரோனுக்கும் இடையில் நடுநிலையாளராக அவர் செயல்படுகிறார். மோசே கடவுளின் நண்பராக இருப்பதால் இந்தத் தகுதியைப் பெறுகிறார். ஒருவன் தன் நண்பனிடம் பேசுவது போலவே ஆண்டவரும் முகமுகமாய் மோசேயிடம் பேசுவார் என்ற சொற்றொடர் (விப 33:11) மோசேக்கும் கடவுளுக்கும் இடையில் உள்ள உறவைத் தெளிவாகக் குறிப்பிடுகிறது.

ஆரோனையும் அவரது வழிமரபினரையும் குருக்களாகத் திருநிலைப்படுத்துவதற்குத் தேவையான அனைத்து விதமான பலிகளையும், சடங்குகளையும் மோசே முன்னின்று செய்கிறார். குருத்துவத் திருநிலைப்படுத்துதல் பல சடங்குகளை உள்ளடக்கியதாக உள்ளது.முதல் முதலாக மோசே ஆரோனையும், அவர் புதல்வரையும் வரவழைத்துத் தண்ணீரில் குளிக்கச் செய்கிறார் (லேவி 8:5-6). இரண்டாவதாக, மோசே தலைமைக் குருவுக்கான உடைகளை ஆரோனுக்கு அணிவிக்கிறார் (லேவி 8:7-9). மோசே ஆரோனுக்குத் தலைமைக் குருவுக்கான உடைகளை அணிவிக்கும் நிகழ்வு படைப்பின் தொடக்கத்தில் ஆண்டவர் ஆதாமுக்கும் ஏவாவுக்கும் ஆடைகள் அணிவிப்பதை நினைவுக்குக் கொண்டுவருகிறது (தொநூ 3:21). இந்த நிகழ்வு ஆண்டவர் அவர்களை ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியேற்று முன்பாக நடக்கிறது. குருக்களுக்கான உடைகளில் வருகின்ற உள்ளங்கி, இடைக்கச்சை, மேலங்கி, ஏப்போது, கைவண்ணப்பட்டை, மார்புப்பட்டை, மற்றும் ஊரிம் தும்மிம் ஆகியவை கோவில் மற்றும் பலிகளுடன் தொடர்புடையவை. மோசே அனைத்தையும் ஆண்டவர் கட்டளையிட்டபடி செய்கிறார். இந்தக் குருத்துவத் திருநிலைப்பாட்டு நிகழ்வில் ஆண்டவர் கட்டளையிட்டபடி அல்லது ஆண்டவரின் ஆணைப்படி என்ற சொற்றொடர்கள் பல இடங்களில் வருகின்றன (லேவி 8:4, 9, 13, 17, 21, 29; 9:7, 10; 10:15). இவை மோசேயின் செயல்கள் கடவுளின் கட்டளைப்படி, அவரது விருப்பத்திற்கேற்ப செய்யப்படுகின்றன என்ற உண்மையை உரக்கக் கூறுவதாக உள்ளது.

மூன்றாவது நிகழ்வாக, மோசே திருப்பொழிவு எண்ணெயால் திருஉறைவிடத்தையும் அதில் உள்ள எல்லாவற்றையும், குறிப்பாக, பலிபீடத்தையும், பலிபீடத்தோடு தொடர்புடைய அனைத்துக் கருவிகளையும், நீர்த்தொட்டியையும், அதன் தாங்கியையும் புனிதப்படுத்துகிறார். அதன்பின்

ஆரோனின் தலையின்மேல் திருப்பொழிவு எண்ணெயில் கொஞ்சம் வார்த்து அவரைத் திருநிலைப்படுத்தும்படி அவருக்கு அருள்பொழிவு செய்கின்றார் (லேவி 8:10-14). நான்காவதாக, மோசே ஆரோனின் புதல்வர்களுக்கு குருக்களுக்கான உடைகளை அணிவிக்கின்றார் (லேவி 8:13). ஐந்தாவதாக, திருநிலைப்பாட்டின் முக்கிய நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன. மோசே திருநிலைப்படுத்துவதற்குத் தேவையான பலிகளை ஒப்புக்கொடுக்கிறார். இங்கே ஒப்புக்கொடுக்கப்படும் பலிகள் விப 29:10-14 பகுதியில் வருகின்ற பலிகளைப் பிரதிபலிக்கின்றன. முதலில் பாவம் போக்கும் பலியானகாளை பலியாக ஒப்புக்கொடுக்கப்படுகிறது. அதன் இரத்தத்தால் மோசே பலிபீடத்தைப் புனிதப்படுத்துகிறார்; பலிகள் ஒப்புக்கொடுக்கப்படுவதற்காக பலிபீடம் புனிதப்படுத்தப்படுகிறது. அதன்பின் இரண்டு ஆட்டுக்கிடாய்கள் பலியிடப்படுகின்றன. முதல் ஆட்டுக்கிடாய் எரிபலியாக ஒப்புக்கொடுக்கப்படுகிறது. இரண்டாவது ஆட்டுக்கிடாய் திருநிலைப்பாட்டுக்குரிய ஆட்டுக்கிடாய் என அழைக்கப்படுகிறது. இந்த ஆட்டுக்கிடாய் ஆரோன் மற்றும் அவரது புதல்வர்களின் பாவங்களைப் போக்குவதற்கான பலியாக ஒப்புக்கொடுக்கப்படுகிறது. இந்தத் திருநிலைப்பாட்டு ஆட்டுக்கிடாயின் சிலமுக்கியமான பகுதிகள் ஆண்டவருக்கு நறுமணமிக்க நெருப்புப் பலியாக ஒப்புக்கொடுக்கப்படுகிறது.

லேவி 8:22-24 வரையுள்ள சொற்றொடர்களில் குறிப்பிடப்பட்டுள்ள செயல்கள் திருநிலைப்பாட்டின் முக்கியமான நிகழ்வுகளாகச் சித்தரிக்கப்படுகின்றன. திருநிலைப்பாட்டுக்குரிய ஆட்டுக்கிடாய் கொண்டு வரப்படுகிறது. அதன் தலைமீது ஆரோனும் அவரது புதல்வர்களும் கைகளை வைக்க ஆடு வெட்டப்படுகிறது. அதன்பின் ஆட்டின் இரத்தத்தில் சிறிது ஆரோனின் வலக்காதுமடலிலும், வலக்கைப் பெருவிரலிலும், வலக்கால் பெருவிரலிலும் பூசப்படுகிறது. ஆரோனின் புதல்வர்களுக்கும் அவ்வாறே செய்யப்படுகிறது. பண்டைய சமூகங்களில் வலதுகை தூய்மையானதாகக் கருதப்பட்டது. எனவேதான் பிறரைத் தொடுவதற்கு வலதுகை பயன்படுத்தப்பட்டது. விருந்துகள் மற்றும் சடங்குகளில் ஒருவருடைய வலதுகைபக்கம் அமர்வது பெருமைக்குரியதாகக் கருதப்பட்டது. காது, கை பெருவிரல் மற்றும் கால் பெருவிரல் ஆகியவை கடவுளின் வார்த்தையைக் கேட்பதையும், பலியிடுவதற்காக தூய்மையான கைகளைக் கொண்டிருப்பதையும், கடவுளோடு நடப்பதையும் குறித்தன (காண்க இச 30:16). இவை எல்லாவிதத்திலும் ஒரு குரு இரத்தத்தால் அருள்பொழிவு செய்யப்பட்டவர் என்பதைக் குறிக்கிறது. எனவே அவர் முழுவதுமாக இறைப்பணிக்கு அர்ப்பணிக்கப்பட்டவர் ஆவார். ஆரத்திபலியாக ஆரோன் மற்றும் அவரது புதல்வர்களின் கையில் மோசே வைக்கின்ற புளிப்பற்ற அப்பங்களும் ஏனைய பொருள்களும் ஆண்டவருக்காக ஆரோனும் அவரது புதல்வர்களும் அளிக்கும் நறுமணப்பலியாகும். அதற்குப் பதிலாக திருப்பொழிவு எண்ணெயாலும் பலிபீடத்தின் மேலிருக்கும் இரத்தத்தாலும் ஆரோன் மற்றும் அவரது புதல்வர்கள் மேலும் அவர்களின் உடைகள் மீதும் தெளிக்கப்படுவது மீண்டும் அவர்களையும் அவர்களின் உடைகளையும் புனிதப்படுத்துகின்ற செயலாகும்.

திருநிலைப்பாட்டு நிகழ்வுகளின் இறுதி நிகழ்வாக விருந்து வருகிறது. ஆரோனும் அவரது புதல்வர்களும் அவர்களின் பங்கு இறைச்சியைச் சந்திப்புக் கூடார நுழைவாயில் முன்பாகச் சமைத்து, அத்துடன் திருநிலைப்பாட்டுக் காணிக்கைக் கூடையிலிருக்;கும் அப்பங்களுடன் உண்ணவேண்டும். விருந்திற்குப் பின் புதிதாக திருநிலைப்படுத்தப்பட்ட குருக்கள் ஏழு நாள்கள் சந்திப்புக் கூடாரத்தின் முன் தங்கியிருக்கவேண்டும்; அவர்கள் முழுமையாக புனிதப்படுத்தப்படவேண்டும் என்பதற்காகவே ஏழு நாள்கள் சந்திப்புக் கூடார நுழைவாயில் முன்பு தங்கியிருக்கிறார்கள். மேலும் விவிலியத்தில் ஏழு என்ற எண் முழுமையைக் குறிக்கின்றஎண். எனவே ஏழுநாள்கள் அவர்கள் சந்திப்புக் கூடாரத்தின் வாயிலில் தங்கியிருப்பது திருநிலைப்பாட்டின் முழுமையை, நிறைவைக் குறிப்பதாகவும் உள்ளது. ஆரோனும் அவரது மகன்களும் திருநிலைப்படுத்தப்படுவதைக் குறிப்பதற்கு திருநிலைப்பாடு என்ற சொல் தமிழ் மொழிபெயர்ப்பில் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் மூலமொழியான எபிரேய மொழியில் திருநிலைப்படுத்துதலைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்றொடர் உனது கைகளை நிறைத்தல் என்று பொருள்படும் (லேவி 8:33). எபிரேய விவிலியத்தில் இந்தப் பொருளில்தான் குருக்கள் திருநிலைப்படுத்தப்படுவது வருகிறது (காண்கவிப 28:41; எண் 3:3; நீத 17:5; 1 அரசர் 13:33). இந்தச் சொற்றொடரின் உண்மையான பொருள் என்னவென்று அறிய அறிஞர்கள் தொடர்ந்து விவாதிக்கிறார்கள். இந்தச் சொற்றொடரின் பொருள் என்னவாக இருக்கலாம் என நாம் சிந்தித்தால் குருவின் கைகள் பலி ஒப்புக்கொடுக்கப்படுவதற்காக புனிதப்படுத்தப்படுவதைக் குறிக்கலாம். லேவியர் 9:17 இல் குருக்களைப் பற்றிக் கூறும்போது, உணவுப்

படையல்களைக் கொண்டுவந்து தம் கை நிறைய எடுத்து காலையில் செலுத்தும் எரிபலியோடு பலிபீடத்தின்மேல் சுட்டெரித்தார் என வாசிக்கிறோம். குருக்கள் தங்கள் கைகளை நிறைப்பதன் வழியாக முதல் பலிகளைச் செலுத்துகிறார்கள். (மேலும் காண்கலேவி 2:2).

ஆரோனும் அவரது வழிமரபினரும்; திருநிலைப்படுத்தப்பட்டபின் ஆரோன் இஸ்ரயேல் சமூகத்தின் சார்பாக தனது முதல் குருத்துவப் பணிகளைச் செய்கிறார். தனக்கென பாவக்கழுவாய்ப் பலி ஒப்புக்கொடுக்கிறார். அதன்பின் மக்கள் சார்பாக பாவம் போக்கும் பலி, எரிபலிகள் மற்றும் நல்லுறவுப் பலிகள் ஒப்புக்கொடுக்கிறார். சடங்குகள் முடிந்ததும் சந்திப்புக் கூடாரத்திற்கு வெளியே வந்து மக்களை ஆசிர்வதிக்கிறார். அந்த வேளையில் கடவுள் தனது மாட்சிமையை மக்களுக்கு வெளிப்படுத்துகிறார். அதன் அடையாளமாக விண்ணிலிருந்து நெருப்பு வந்து பலிப்பொருள்களை விழுங்குகிறது. கடவுள் தனது மாட்சியை வெளிப்படுத்துவதன் வழியாக ஆரோன் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டு கடவுளின் திருமுன்னிலையில் பணி செய்வதை கடவுள் ஏற்றுக்கொள்கிறார்; அவரது ஒப்புதலை அளிக்கிறார் (லேவி 9) என்பது வெளிப்படுகிறது. கடவுளுக்கும் இஸ்ரயேல் மக்களுக்கும் இடையில் உள்ள உறவில் ஒரு முக்கியமான நேரமிது. மக்கள் மகிழ்ந்து கொண்டாடவேண்டிய நேரமிது. இஸ்ரயேல் மக்கள் நடுவில் ஆரோனின் குருத்துவம் தொடங்கிய நேரமிது, மக்களின் இந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை. கடவுளின் மாட்சி தொடர்ந்து மக்கள் நடுவில் துலங்கவில்லை. அதற்குக் காரணமாக ஆரோனின் மகன்களான நாதாபும் அபிகூவும் இருக்கின்றனர். அவர்கள் தங்களின் தூபக்கலசங்களை எடுத்து அதில் நெருப்பையும் தூபத்தையும் இட்டு ஆண்டவர் கட்டளைக்கு எதிராக நெருப்பைக் கொண்டு செல்கின்றனர். உடனே ஆண்டவரிடமிருந்து நெருப்பு விரைந்தெழுந்து அவர்களை விழுங்குகிறது. அவர்கள் ஆண்டவர் முன்னிலையிலேயே மடிகின்றனர் (லேவி 10:1-3). மகிழ்ச்சியுடனும் கொண்டாட்டங்களுடனும் முடியவேண்டிய நேரம் துக்கத்துடன் முடிவடைகிறது.

இந்த நிகழ்வு ஓர் உண்மையை உரக்கச் சொல்கிறது. கடவுளின் திருமுன்னிலையில் பணிபுரிய வேண்டிய குருக்கள் தூய்மையுடன் செயல்படவேண்டும். குருத்துவப் பணியின் முக்கியத்துவமும், குருக்கள் நேர்மையுடனும் உண்மையுடனும் தூய்மையுடனும் வாழவேண்டியதன் அவசியமும் இங்கே வலியுறுத்தப்படுகின்றன. ஆண்டவர் ஆரோனிடம் கூறுகின்ற ஒரு செய்தியும் இங்கே நினைவுகூரத் தக்கது. இதுவே ஆண்டவர் ஆரோனிடம் நேருக்கு நேர் பேசுகின்ற முதல் வார்த்தைகள்: நீரும் உம்மோடு உம் புதல்வரும் சாகாதிருக்க வேண்டுமெனில், நீங்கள் சந்திப்புக் கூடாரத்திற்குள் நுழையும்போது திராட்சை இரசத்தையோ மதுவையோ குடிக்கவேண்டாம் (லேவி 10:9) என்பதாகும். மது அருந்துவது மனநிலையில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. மதுவுக்கு அடிமையான குருக்களையும் இறைவாக்கினர்களையும் பற்றி இறைவாக்கினர் எசாயா இவ்வாறு கூறுகின்றார்: குருக்களும் இறைவாக்கினரும் திராட்சை இரசத்தால் தடுமாறுகின்றனர்; மதுவால் தள்ளாடுகின்றனர்; அவர்கள் மதுவால் மதிமயங்குகின்றனர்; திராட்சை மதுவுக்கு அடிமையாகின்றனர்; மதுவால் மயங்குகின்றனர்; காட்சி காணுகையில் மருள்கின்றனர்; நீதி வழங்குகையில் தடுமாறுகின்றனர்! (எசாயா 28:7). நிலைதடுமாறும் குருக்களால் தங்கள் பணிகளைத் தடுமாற்றமின்றிச் செய்யமுடியாது. மக்களிடமிருந்து அழைக்கப்பட்ட குரு கடவுளுக்கும் மக்களுக்கும் இடையில் நடுநிலையாளராகச் செயல்படவேண்டும். கடவுளின் வார்த்தைகளை மக்களுக்கு அறிவிக்கவேண்டும்; மக்களின் வேண்டுதல்களை கடவுளுக்கு எடுத்துச்செல்ல வேண்டும். குறிப்பாக குருக்கள்

தூயதற்கும் தூய்மையற்றதற்கும், தீட்டுள்ளதற்கும் தீட்டற்றதற்கும் உள்ள வேறுபாடுகளை மக்களுக்கு விளக்கிக் கூறவேண்டும் (லேவி 10:10). குருக்கள் இன்னும் சில சிறப்பு உரிமைகளையும் கடமைகளையும் கொண்டவர்களாக கருதப்படுகிறார்கள். குறிப்பாக, குருக்கள் மக்களின் பாவங்களைச் சுமப்பவர்களாகக் கருதப்படுகிறார்கள். அதுமட்டுமல்ல ஆண்டவரின் நெருப்புப் பலிகளில் எஞ்சிய உணவுப் படையலை உண்பதற்கு உரிமையுடையவர்கள். மேலும் ஆரத்திப் பலியான நெஞ்சுக் கறியையும் உயர்த்திப் படைக்கும் பலியான முன்னந்தொடையையும் ஆரோனும் அவருடைய புதல்வர்களும் உண்ணலாம். இன்னும் பாவம் போக்கும் பலிப்பொருளையும் குருக்கள் உண்ணலாம். அதன் வழியாக அவர்கள் மக்கள் கூட்டமைப்பின் குற்றப்பழியை ஏற்றுக்கொண்டு ஆண்டவர் திருமுன் மக்களுக்குக் கறைநீக்கம் செய்கிறார்கள் (லேவி 10:17).

பயணம் தொடரும்...

அருட்பணி. ஆ. அலெக்ஸ் CMF




மறையுரை வழங்குபவர்

அருட்பணி. **ஜஸ்டின் சேவியர் ராஜ்**

M.A.(Phil)., M.A.(Phil.lic).,M.A.(Chris).,Dip Pas Coun, M.Sc (Psy)., MBA., MPhil., Phd.

பங்குத்தந்தை

**பங்குத்தந்தை, திருக்குடும்ப ஆலயம்**

பெருந்துறை, கோயமுத்தூர்


# நாயிறு மறையுரை

## பொதுக்காலம் 8–ஆம் ஞாயிறு

19–02–2023

| முதல் வாசகம் |
|---|
| **தொ.நூ. 2:7–9, 3:1–7** |

| இரண்டாம் வாசகம் |
|---|
| **உரோமையர் 5:12–19** |

| நற்செய்தி வாசகம் |
|---|
| **மத்தேயு 4:1–11** |

இறை இயேசுவில் பிரியமான சகோதர, சகோதரிகளே, பிலிப் ஜான் என்ற ஆசிரியர் தனது புத்தகம் ஒன்றில் தன்அனுபவத்தை பதிவு செய்திருக்கின்றார். சில ஆண்டுகளுக்கு முன் தொடர்ச்சியாக இரண்டு தினங்கள் பெரிய நாகபாம்பைப் பார்த்த அனுபவம் அது. ஒன்று அவரது தோட்டத்தில் மற்றது அவரது கழிவறையில். இரண்டு அனுபவங்களிலும் மிக மிக அருகாமையில் சந்தித்தது இரண்டு அனுபவங்களிலும் உடனடியாக செயல்பட்டு உயிரைக் காத்துக் கொண்டது மிகமிக சுவாரஸ்யமாக இருந்தது என்று பதிவு செய்கிறார். அவரது அறையில் அமர்ந்து கடவுள் எப்படி அதிசயமாக அந்த ஆபத்தான சூழ்நிலையில் தன்னைக் காத்தார் என்று நினைத்துக் கொண்டிருந்தபோது, விவிலியத்தில் ஒரு பகுதி அவருக்கு நினைவுக்கு வந்தது. சீராக் புத்தகம் 21/1–2. குழந்தாய், பாவம் செய்துவிட்டாயா? இனிமேல் செய்யாதே. உன் பழைய பாவங்களுக்காக மன்னிப்பு கேள். பாம்பைக் கண்டு ஓடுவதைப்போல, பாவத்தை விட்டு ஓடிவிடு. நீ பாவத்தின் அருகில் சென்றால், அது உன்னைக் கடிக்கும். அதன் பற்கள் சிங்கத்தின் பற்களைப் போன்றவை, அது மனிதரின் உயிரைப் போக்கிவிடுடம்.

இறையேசுவில் அன்புள்ளவர்களே, பாம்பைக் கண்டால் யாரும் அதை அள்ளி எடுத்து அரவணைத்து முத்தம் தரமாட்டார்கள். அப்படியென்றால் பாவத்தை பொறுத்தவரை நம் அணுகுமுறை என்ன? எது அதிகம் கொடூரமானது? பாம்பா? பாவமா? நாம் அவைகளை அள்ளி முத்தமிட்டு மகிழ்கிறோமா? அல்லது உயிரைக் காத்துக் கொள்ள தூர ஓடுகிறோமா? இன்று நாம் தவக்காலத்தன் முதல் ஞாயிற்றுக்கிழமையைக் கொண்டாடுகின்றோம். உலகம் ஒரு சோதனைக் களம். மனித வாழ்வில் சோதனை என்பது ஒரு தொடர்கதை போன்றது. மனிதன் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும், அது மனித இதயத்தைத் தழுவிக்கொள்கின்றது. ஆனால் அந்த சோதனைகளையும், வென்று சாதனை படைப்பது என்பதுதான் முக்கியம். மனவுறுதியோடும் கட்டுப்பாட்டோடும் நிதானமாகச் செயல்படும்போது சோதனைகளை எளிதில் வெல்லலாம். தவக்காலம் மனிதனின் மனநிலையை சுயஆய்வுக்கு உட்படுத்தும் காலமாகும். இறைமனித உறவையும், மனித சமூக உறவையும் பலப்படுத்தும் காலமாகும். காற்று எங்கும் எப்போதும் இருக்கின்றதுதான். ஆனால் உங்கள் அறைக்கதவை, ஜன்னல்களைத் திறந்து வைத்திருந்தால் மட்டுமே, அது உள்ளே வரமுடியும். நம்பிக்கையும் அப்படித்தான். தன்னை வரவேற்றுக் கொள்கின்றவர்களின் மனங்களில் மட்டுமே அது குடிகொள்ளும். சுய கட்டுப்பாடு, நேர்மறை மனோபாவம், இவற்றில் நம்பிக்கை மேம்படும். பொறாமை, பேராசை, வெறுப்பு, அகந்தை, கவலை, அச்சம் இவற்றால், நம்பிக்கை பாழ்படும். சுயகட்டுப்பாடு என்பது பயிற்சியின் மூலம், மனதை ஒருமுகப்படுத்திக்கொள்வது.



# தவக்காலத்தின் முதல் ஞாயிறு

தொ.நூ. 2:7-9, 3:1-7, உரோ. 5:12-19, மத். 4:1-11

26-02-2023




பா. சேவியர்
மரியநாதபுரம்,
திண்டுக்கல்


## திருப்பலி முன்னுரை

சோதனைகளைக் கண்டு சோர்ந்து போகாமல், அவற்றை வெல்வதற்கான வழிமுறைகளைக் கற்றுக்கொள்ள வருகை தந்துள்ள அன்பு இறை மக்களே, சோதனைகளை வெல்லத் தூண்டும் காலமாகிய தவக் காலத்தின் முதலாம் ஞாயிறு வழிபாட்டிற்கு உங்களை அன்புடன் வரவேற்கிறேன்.

சோதனைகளை தன்னம்பிக்கையுடனும், மன உறுதியுடனும், இறை வார்த்தையின் துணை கொண்டும் எதிர்கொள்பவன் அதனை வென்று சாதனையாளனாகிறான். புதிய சகாப்தம் படைத்து சரித்திரமாகிறான் என்பதை எக்காளத் தொனியோடு எடுத்துரைக்கிறது இன்றைய வார்த்தை வழிபாடு.

மடியாத விதையில் வளர்ச்சி இல்லை. தியாகமில்லா வாழ்வில் தாய்மை இல்லை. விசுவாசமில்லா வாழ்வில் கிறிஸ்துவமில்லை. சோதனை இல்லா வாழ்வில் சாதனை இல்லை.

இயேசு சோதிக்கப்பட்டார், சோதனையை வென்று உலக மீட்பரானார். ஆபிரகாம் சோதிக்கப்பட்டார். சோதனையை வென்று விசுவாசத்தின் தந்தையானார். யோபு சோதிக்கப்பட்டார். உள்ளதெல்லாம் எடுக்கப்பட்ட நிலையிலும் சோதனையை வென்று இறைப் புகழ்ச்சியின் இமயமானார்.

அலகையின் சோதனைகளை வென்று, கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றிய இயேசுவைப் பின்பற்றி நாம் நம் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் சோதனைகளை மனஉறுதியுடனும், இறை வார்த்தை துணைகொண்டும், உருக்கமான செப வழிபாட்டின் வழியாகவும், ஆழ்ந்த விசுவாசம் என்னும் ஆயுதம் கொண்டும் முறியடிக்க இறையருளை வேண்டி இத்திருப்பலியில் பக்தியுடன் பங்கெடுப்போம்.

## முதல் வாசக முன்னுரை

இன்று நாம் கேட்கவிருக்கும் முதல் வாசகம் மனிதனின் படைப்பு மற்றும் அவனது வீழ்ச்சி பற்றி கூறுகிறது. ஏவாள் அலகையால் வஞ்சிக்கப்பட்டாள். ஆதாம் ஏவாளால் வஞ்சிக்கப்பட்டான். இருவரும் இறைவனை வஞ்சித்தார்கள். வஞ்சகத் தாலும், பேராசையாலும், நம்பிக்கை யின்மையாலும் மனித வாழ்வில் பாவம் உள்ளே நுழைகிறது என்பதை எடுத்து ரைக்கும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

அலகையை நம்பிய ஆதி பெற்றோர், ஆண்டவரோடு இருந்த நல்லுறவை துண்டித்துக் கொண்டனர். துண்டிக்கப்பட்ட இந்த உறவை இரண்டாம் ஆதாமாகிய கிறிஸ்து மீண்டும் புதுப்பித்துக் கொடுக் கிறார். இந்த இரண்டு ஆதாம்களுக்கும் இடையே உள்ள வேறுபாட்டை இன்றைய இரண்டாம் வாசகம் எடுத்து சொல்கிறது. ஆதாம் – கிறிஸ்து, சாவு – வாழ்வு, பாவம் – மீட்பு ஆகியவை மனித வாழ்வோடு கொண் டுள்ள தொடர்பையும், அதன் விளைவு களையும் எடுத்துரைக்கும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## மன்றாட்டுகள்

1) சோதனைகளை சாதனைகளாக மாற்றவல்ல அன்பு இறைவா, தவம், செபம், பிறரன்பு என்ற இம்மூன்று செயல்கள் வழியாக மீட்புப் பணிகளை ஆற்றிவரும் உம் திருஅவையின் தலைவர்கள் தம் வாழ்வில் எத்தகைய சோதனைகளை எதிர்கொண்டாலும் அவற்றை உம் திருமகன் இயேசுவைப் போல் மனஉறுதியுடனும் இறை வார்த்தை துணை கொண்டும் வென்று, சாதனைகள் புரிந்திட வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2) நன்மையின் ஊற்றே இறைவா, நாங்கள் வாழ்வு தரும் வார்த்தைகளை யே எப்போதும் பேசவும், நலம் தரும் நற்செயல்களில் என்றும் ஈடுபடவும், நாள்தோறும் நல்லவற்றையே சிந்தித்து நேர்மையான வழிகளில் எங்கள் வாழ்க்கைப் பாதையை வகுத்துக் கொண்டு வாழவும் வரமருள வேண்டு மென்று இறைவா உம்மை மன்றாடு கிறோம்.

3) பரிவன்பும் கருணையும் நிறைந்த இறைவா, உம் திருமுன் ஒரே குடும்பமாக கூடியுள்ள நாங்கள் அனைவரும் உம்மீது உண்மையான நம்பிக்கை வைத்து அதன்படி எங்கள் வாழ்வை அமைத்துக்கொள்ளவும். எத்தகைய சோதனைகள் வந்தாலும் அவற்றை மன உறுதியுடனும், தன்னம்பிக்கை யோடும், ஆழ்ந்த விசுவாசத்தோடும், தூய ஆவியானவரின் துணையோடும் சுலபமாக வெல்லவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4) பேரன்பும், பெருங்கருணையும் கொண்ட தந்தையே இறைவா, அரசு தேர்வுகள் எழுத தயாராகிவரும் எம் அன்புப் பிள்ளைகளை உம் திருக் கரங்களில் ஒப்படைக்கிறோம். அவர்களுக்கு சிறந்த ஞானத்தையும், ஞாபக சக்தியையும், நல்ல உடல் நலத்தையும் தந்தருள வேண்டுகிறோம். அவர்கள் சிறப்பாக தேர்வுகளை எழுதி, உயர்ந்த மதிப்பெண்களைப் பெற்று வெற்றி அடைய உம் பேரருளை அவர்கள் மேல் பொழிந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

# திருக்குறள் வழங்கும் சமூக நெறிச் சிந்தனைகள்



சிந்தனையாளர்
அருட்சகோதரி. **ஜெஸிந்தா ஜான்சன்** FSPM



## குறள்-34

**மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற**

### குறள் விளக்கம்

ஒருவன் தன் மனதில் குற்றம் இல்லாதவனாக இருக்க வேண்டும். அறம் அவ்வளவே: மனத்தூய்மை இல்லாத மற்றவை ஆரவாரத் தன்மை உடையவை

### சிந்தனை

ஒரு பள்ளி ஆண்டுவிழா. பெற்றோரும் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஓர் ஓவியர் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார். அவர் முதலில் ஒரு புன்னகை முகத்தை வரைந்தார். பின்னர் ஒரு சில கோடுகளை மட்டும் திருத்தி அதனை அழும் முகமாக மாற்றினார். முதல் வரிசையில் இருந்த ஒரு மாணவனைத் தவிர அனைவரும் கரவொலி எழுப்பினர். விசாரித்தபோது அவன் சொன்னான், என் பெற்றோர் உங்களைவிட திறமையானவர்கள். ஒன்றிரண்டு கடும் வார்த்தைகளைச் சொல்லியே என் புன்னகை முகத்தை அழும் முகமாக்கி விடுவார்கள் என்றான். அவன் பெற்றோர் வெட்கத்தில் தலை கவிழ்ந்தனர்.

' எண்ணம் போல் வாழ்வு' என்பர். நாம் மனதில் என்ன எண்ணுகிறோமோ அது தான் நம் செயலாகும். எதைச் செய்கிறோமோ அது நம் பழக்கமாகிவிடும். எதை நாம் பழக்கமான கொண்டுள்ளோமோ அது தான் நம் குணநலன் ஆகிவிடும். எனவே எண்ணங்கள் நன்றாக இருந்தால் மனிதன் நல்லவனாக இருப்பான். எனவே 'மனத்துக்கண் மாசிலன் ஆதல்' அதாவது மனதில் தீய சிந்தனை இல்லாமல் இருக்க வேண்டும் என்கிறார் வள்ளுவர்.

சிலர் வெளியில் பெண்விடுதலை பற்றி நன்றாக பேசுவர் ஆனால் வீட்டினுள் பெண் பிள்ளைகளுக்கோ மனைவிக்கோ உரிய சுதந்திரத்தை மறுப்பர். சிலர் சுத்தத்தைக் குறித்து பிரமாதமாக பேசுவர் ஆனால் அவர்கள் அறை குப்பை நிறைந்ததாக இருக்கலாம். இவ்வாறு புறம் ஒன்றும் அகம் ஒன்றுமாக செயல்படுவது நடிப்புதான். எனவே மனதளவில் மாசற்றவனாக இருப்பது தான் அறம் என்கிறார் வள்ளுவர்.

ஆண்டவர் இயேசுவும் நான் உங்களுக்கு சொல்கிறேன், ஒரு பெண்ணை இச்சையுடன் நோக்கும் எவரும் தம் உள்ளத்தால் ஏற்கெனவே அப்பெண்ணோடு விபச்சாரம் செய்தாயிற்று என்கிறார் மத் 5:28. எனவே மனதளவில் கூட குற்றமில்லாமல் இருந்தால் தான் நல்லது செய்ய முடியும். மனதளவில் குற்றம் உடையவர் வாய்ப்பு கிடைக்கும்போது அந்த தவறை நிச்சயம் செய்துவிடுவர். ஆனால் மனதளவில் தூய சிந்தனை உடையவர்கள் வாய்ப்பு கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் நல்லவர்களாகவே இருப்பர்.

எனவே மனதினை நல்ல எண்ணங்களால் நிரப்புவோம். பிறர் மனதை புண்படுத்தும் எதிர்மறைகளை தவிர்ப்போம்.

திருப்பலி வாசகங்கள்

# தவக்காலம் 1–ஆம் வாரம்

**26.02.2023**
**முதல்**
**05.03.2023**

**26.02.2023 – தவக்காலம்**
**1–ஆம் வாரம் ஞாயிறு**

முதல் வாசகம் : தொடக்கநூல் 2:7–9, 3:1–7
இரண்டாம் வாசகம் : உரோமையர் 5:12–19
நற்செய்தி : மத்தேயு 4:1–11

**27.02.2023 – திங்கள் கிழமை**

முதல் வாசகம் : லேவியர் 19:1–2, 11–18
நற்செய்தி : மத்தேயு 4:1–11

**28.02.2023 – செவ்வாய் கிழமை**

முதல் வாசகம் : எசாயா 55:10–18
நற்செய்தி : மத்தேயு 6:7–15

**01.03.2023 – புதன் கிழமை**

முதல் வாசகம் : யோனா 3:1–10
நற்செய்தி : லூக்கா 11:29–32

**02.03.2023 – வியாழக்கிழமை**

முதல் வாசகம் : எஸ்தர் (கி) 12, 14–16, 23–25
இரண்டாம் வாசகம் : மத்தேயு 7:7–12

**03.03.2023 – வெள்ளிக்கிழமை**

முதல் வாசகம் : எசேக்கியல் 18:21–28
நற்செய்தி : மத்தேயு 5:20–26

**04.03.2023 – சனிக்கிழமை**

முதல் வாசகம் : இணைச்சட்டம் 26:16–19
நற்செய்தி : மத்தேயு 5:43–48

**05.03.2023 – ஞாயிறு**
***தவக்காலம் இரண்டாம் வாரம்***

முதல் வாசகம் : தொடக்கநூல் 12:1–4அ
இரண்டாம் வாசகம் : 2திமொத்தேயு 1:8 ஆ – 10
நற்செய்தி : மத்தேயு 17:1–9



"Teach us to give and not count the cost."

- St. Ignatius de Loyola -

# நலம் தரும் இயற்கை வளம்



ஜே. அன்புரோஸ்
கோபிச்செட்டிபாளையம்.

உறவுகளே இனிய வணக்கம். இன்றைய நலக்கல்வி..!

இதுவரை யாரும் சொல்லி தராத அனைத்து வகையான காய்கறிகளை பயன்படுத்தி
மருந்து மாத்திரைகள் எதுவும் இல்லாமல்
வாழ் நாள் முழுவதும் ஆரோக்கியமாக வாழ

காய்கறிகளின் மந்திரி சபை

பிரதமமந்திரி:
அரசாணிக்காய்
தசை மண்டலம்

உள்துறை அமைச்சர் :
பீர்க்கங்காய்
நிணநீர் மண்டலம்

வெளியுறவு துறை அமைச்சர் :
வெண்பூசணிக்காய்
ஜீரண மண்டலம்

பொருளாதார அமைச்சர்:
தேங்காய்
எலும்பு மண்டலம்

போக்குவரத்து அமைச்சர்:
வாழைக்காய்
இரத்த ஓட்ட மண்டலம்

கல்வித்துறை அமைச்சர் :
கொத்தவரங்காய்
நரம்பு மண்டலம்

சுகாதார அமைச்சர்:
கோவைக்காய்
தோல் மண்டலம்

நீர்வளத்துறை அமைச்சர்:
சுரைக்காய்
சிறுநீரக மண்டலம்

மின்சாரத்துறை அமைச்சர் :
முருங்கைக்காய்
சுவாசமண்டலம்

பாதுகாப்பு அமைச்சர்:
எலுமிச்சை
நாளமில்ளா சுரப்பி மண்டலம்

மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர்:
வெண்டைக்காய்
நாளமுள்ள சுரப்பி மண்டலம்

தகவல் தொடர்புத்துறை அமைச்சர்:
புடலங்காய்
புலன்கள் மண்டலம்

இவைகள் இறைவனால் மக்களின் நலனுக்காக நியமிக்கப்பட்டவை.
மருந்து மனிதர்களால் உருவாக்கப்பட்டது
காய்கறிகள் கடவுளால் படைக்கப்பட்டது.
மனிதன் இறைவனின் படைப்புடன் போட்டி போட இயலாது.
படைத்தவருக்கு நன்றி சொல்வோம்
படைப்பினை மகிழ்ச்சியுடன் பயன்படுத்துவோம்

நன்றி உறவுகளே... என்றும் உங்கள் அன்பு சகோதரன்

**ஜே. அன்புரோஸ்**
நலநெறியாளன்
தொடர்பு எண் : **9360456063**